
தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம்
இலட்சுமிபுரம் ஊராட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திருமதி.C.ஜெயமணிசந்திரன்



செ.மு. ந.க.எண். 06 / 2023-2024 நாள்:23.02.2024

பொருள் : மனைப்பிரிவு - தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம், இலட்சுமிபுரம் ஊராட்சி, இலட்சுமிபுரம் கிராமம், சர்வே எண்கள். 2523/2A1, 2523/2A3,2523/3A, 2523/3C (9746 ச.மீ) நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவுகளை அங்கீகரித்து - உத்தரவிடுதல்.

பார்வை :
1) மனுதாரர் திருமதி..S.நித்யா, த/பெ.சூசைராஜ், அவர்களின் விண்ணப்பம் நாள்.16.01.2024.
2) தலைவர், இலட்சுமிபுரம் ஊராட்சி அவர்களின் கடித நாள்.
3) மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தேனி மாவட்டம் அவர்களின் கடிதம் **ந.க.எண்.THENI/Q6TYOCUD/2024/TCP , நாள்.10.02.2024.**
4) அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்.09.12.2020.

உத்தரவு :

அ) தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம், இலட்சுமிபுரம் ஊராட்சி, இலட்சுமிபுரம் கிராமம், சர்வே எண்கள். **2523/2A1, 2523/2A3,2523/3A, 2523/3C (9746 ச.மீ)** பரப்பளவு கொண்ட இடத்தில் மனைப்பிரிவு அனுமதிகோரி பார்வையில் 1-ல் பெறப்பட்ட விண்ணப்பம் மூலம் பார்வை 2-ல் காணும் கடிதம் வழியாக நகர் ஊரமைப்பு துறைக்கு அனுப்பப்பட்டு, பார்வை 3-ல் குறிப்பிட்டுள்ள நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களால் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பார்வை 4-ல் தெரிவித்துள்ளபடி கூராய்வு கட்டணம் **ரூ.1000/-** மற்றும் நிலப்பயன் மாற்ற கட்டணமாக சந்தை மதிப்பில் 3 விழுக்காடு தொகை **ரூ.447500./-** மொத்த தொகையை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள சர்வே எண்களில் உள்ள தங்களது 23 மனைப்பிரிவுகளுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் நிர்வாக அனுமதி வழங்கி இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்புத் துறையினால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் ஊராட்சியின் முன் அனுமதியின்றி செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்தவொரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வேறு எந்தவிதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்தவொரு மனையும் பொதுக் காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR 2019ல் குறிப்பிட்டுள்ள Residential Use-ல் குறிப்பிட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னரே ஊராட்சியின் அனுமதி பெறப்படும்.

5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின் கம்பிப் பாதை / தந்திக் கம்பி பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறே மாற்றி அமைக்க வேண்டும்.

6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

8. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் ஊராட்சியின் அனுமதி பெற வேண்டும்.

9. மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் ஊராட்சி பரிசீலித்து எடுக்கும் இறுதி முடிவிற்கு கட்டுப்பட வேண்டும். உரிமையில் மாறுபாடு கண்டறியப்பட்டால் நிர்வாக அனுமதி இரத்து செய்யப்படும்.

10. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நிலஉரிமை ஆவணங்களின்படி நிலஉரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நிலஉரிமம் இல்லாத இடத்திற்கு மனைபிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

11. நிலஉரிமம் குறித்து வழங்கப்பட்டுள்ள சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட அனுமதி எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ஊராட்சியால் இரத்து செய்யப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம் :

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு - 1955.80 ச.மீ

ஒதுக்கிய மனைகள்

மனை எண்கள் (01 முதல் 23 வரை) - 23 எண்ணம்

பொது ஒதுக்கீடு : - (தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டது)

பூங்கா - 822.29 ச.மீ (10.56%)

உள்ளாட்சி உபயோகம் - 50.00 ச.மீ (0.64%)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
மின் பகிர்மான கழக உபயோகத்திற்கு
(TANGEDCO) - 50.00 ச.மீ (0.64%)

C. Jay
PRESIDENT
LAKSHMIPURAM PANCHAYAT
தலைவர்
இலட்சுமிபுரம் ஊராட்சி

பெறுநர் :

திருமதி.S.Nithya,
D.No.1/122, South Street,
Punalvasal West,
Pattukottai Taluk,
Thanjavur -614803.

தீர்மான நகல்

இலட்சுமிபுரம் ஊராட்சி மன்றத்தின் 2024-ம் ஆண்டு 10.01.2024. தேதி காலை 11.00 மணியளவில் சாதாரண கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் C.ஜெயமணிசந்திரன் அவர்களின் முன்பு நடைபெற்றது. இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொருள்	*தீர்மானம்*
தேனி மாவட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம், இலட்சுமிபுரம் ஊராட்சி தாமரைக்குளம் கிராமம் பிரிவு II சர்வே எண்கள்: 2523/2A1, 2523/2A3,2523/3A, 2523/3C **S.நித்யா D.NO.-1/122, South Street, Punalvasal West, Pattukottai Taluk, Thanjavur District-614803 வசிப்பவர்** (9746 ச.மீ) பரப்பளவு இடத்தில் போடபட்ட மனைப்பிரிவுகளில் உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட பொது நல பயன்பாட்டிற்கான (50.00.ச.மீ) இடம் மேதகு ஆளுநர் பெயரில் பதிவு செய்து அனைத்தும் தார் சாலைகளாக மாற்றப்பட்டு வடிகால் பாலங்கள், குடிநீர் குழாய் இணைப்புகள் அனைத்து அடிப்படை வசதிகளும் ஊராட்சிக்கு ஒப்படைத்ததை மன்றம் பரிசீலித்து அங்கீகரிக்க,	தீர்மானம் எண். **206/2023-2024** மன்றம் அங்கீகரிக்கப்பட்டது

/ உண்மை நகல் /

C. Jay

PRESIDENT
LAKSHMIPURAM PANCHAYAT

ஊராட்சி தலைவர்
இலட்சுமிபுரம் ஊராட்சி